

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (20.08.2025) வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள், நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத் துறையின் அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மற்றும் காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவர் இரா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

### பருவமழைக்கு முன்னதாக

# வெள்ளத்தடுப்புப் பணிகளை விரைந்து முடித்திடுக!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை,ஆக.21-**

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையில், நேற்று 20.08.2025 காணொலிக் காட்சி வாயிலாக நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அரசால் இதுவரை அறிவிக்கப்பட்ட 1782 பணிகளில், முடிவுற்ற பணிகள் - 1007, முன்னேற்றத்தில் உள்ள பணிகள் - 775, அவைகளின் பணி வாரியாக அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ரூ.595.18 கோடி மதிப்பீட்டிலான 15 அறிவிப்புகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார். மேலும் 2025-2026 ஆண்டின் அறிவிப்புப் பணிகளில் ரூ.1321.52 கோடி மதிப்பீட்டில் 254 பணிகளுக்கு அரசாணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ரூ.338.00 கோடி மதிப்பீட்டில் அரசாணை வழங்கப்பட்ட ஒக்கியம் மடுவு உள்ளிட்ட 12 வெள்ளத் தணிப்புப் பணிகளை பருவமழைக்கு முன்னதாக முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் ரூ.98 கோடி செலவில் சிறப்பு தூர் வாரும் பணிகள் சீரிய முறையில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் முடிக்கப்பட்டு மேட்டூர் அணையிலிருந்து குறித்த நேரத்தில் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலத்தின் அனைத்து தூர் வாரும் பணிகளையும் விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார். இன்று 20.08.2025 காலை 8.00 மணி நிலவரப்படி 1,14,098 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் முழுக்கொள்ளளவான 120.13 அடியில் உள்ளது, இச்சூழலில் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான வெள்ள அபாய எச்சரிக்கையினை தேவைப்படும் போது உடனடியாக விடுக்க சம்பந்தப்பட்ட நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆண்டில் ஜீன் மாதம் 29.06.2025 தேதியிலும், ஜுலை மாதத்தில் 05.07.2025, 20.07.2025, மற்றும் 25.07.2025 ஆகிய தேதிகளிலும் 5-வது முறையாக 20.08.2025 இன்று முழுக்கொள்ளளவை (120 அடி) எட்டியுள்ளது எனக் குறிப்பிட்டு, கிடைக்கும் உபரி நீரை முறை சார்ந்த குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பிவிட்டு நீரை முடிந்த அளவு சேமிக்க நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். சரபங்கா திட்டத்தில் 56 ஏரிகளில் 49 ஏரிகள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 7 ஏரிகளும் விரைவில் நிரப்பிட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவர் இரா.சுப்பிரமணியன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் சு. கோபாலகிருஷ்ணன் மற்றும் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் (ம) செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நேற்று (20.08.2025) செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ.66.78 கோடி மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது வரிசை குடிநீர் குழாய் பரிசோதனை ஓட்டத்தினை ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி துசை துணை மேயர் மு. மகேஷ் குமார், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் திருமதி.ரா.சரண்யா, சென்னை குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் (பொ) திருமதி. டி.மைதிலி, நகராட்சி தலைவர்கள், நகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### குறு, சிறு — நடுத்தர தொழில்களின் கடன் இடைவெளியை நிரப்ப

# ஒன்றிய அரசு கடன் விதிமுறைகளை எளிதாக்க வேண்டும்!

## மக்களவையில் அருண் நேரு வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஆக. 21 -*

*மக்களவையில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண்நேரு எழுப்பிய கேள்வி வருமாறு:*



*நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) குறித்து ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 30% பங்களிப்பும், 60%க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கும் MSME துறை இப்போது மிக முக்கிய மான சவாலான நிலைமையில் உள்ளது.*

*2024 மார்ச் 31 நிலவரப்படி, MSME கடன்களுக்கு தொடர்பான மொத்த செயல்படாத சொத்துக்கள் (GNPA) ரூ.1.25 லட்சம் கோடியாக இருந்தன. 2020 மார்ச் மாதத்தில் 11.03% இருந்த GNPA விகிதம், 2024 மார்ச் மாதத்தில் 4.46% ஆக குறைந்துள்ளதாலும், இந்த மேம்பாடு ஆழ்ந்த சிக்கல்களை மறைத்து நிற்கிறது.*

*MSME துறையில் கடன் ஊடுருவல் விகிதம் இன்னும் 14% மட்டுமே உள்ளது; இது அமெரிக்கா (50%) மற்றும் சீனா (37%) போன்ற முன்னேற்ற நாடுகளை விட மிகவும் குறைவாக இருப்பதாக 2023 ஆம் ஆண்டு எர்ன்ஸ்ட் & யங் (Ernst & Young) தெரிவித்துள்ளது. சுமார் ரூ.30 லட்சம் கோடி கடன் இடைவெளி இருப்பது MSME வளர்ச்சியை தடுக்கும் முக்கிய காரணமாக உள்ளது.*

*இந்தியாவில் சுமார் 5.6 கோடி MSME நிறுவனங்கள் உள்ள நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளில் 61,500 யூனிட்கள் மூடப்பட்டிருப்பது கவலைக்குரியது. கொரோனா தொற்று நோய், டிஜிட்டல் சவால்கள், குறைந்த கோரிக்கை, தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவை MSME நிறுவனங்களை முடக்கி விட்டன. மேலும், சிக்கலான தகுதி விதிமுறைகள் மற்றும் வெளிப்படையற்ற சிபில் (CIBIL) மதிப்பீட்டு முறைகள், முறையான கடனைப் பெறுவதில் பெரும் தடையாக உள்ளன.*

*எனவே, MSME துறையின் கடன் இடைவெளியை நிரப்ப மத்திய அரசு கடன் விதிமுறைகளை எளிதாக்கவும், நிதி கல்வியறிவை மேம்படுத்தவும், நிறுவனம் சார்ந்த ஆதரவை அதிகரிக்கவும் வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அருண் நேரு கேள்வி எழுப்பினார்.*


